## சுருக்கம்

கைத்தறித் தொழில் – 2014 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் – தொடர்ந்து செயல்படுத்துதல் மற்றும் வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்தல் – அனுமதித்தல் – முன்பணமாக ரூ.344,75,00,000 கோடி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை

அரசாணை (நிலை) எண். 149

நாள் 28.06.2013
விஜய, ஆனி 14
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.137, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை நாள் 28.6.2012
2. அரசாணை (நிலை) எண்.130, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை நாள் 13.6.2013
3. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 4118/2012/ப்பி1, நாள் 23.5.2013
4. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 22185/2013/ப்பி1, நாள் 26.6.2013/
5. அரசு ஆணை (நிலை) எண்102, நிதி (வ.செ.பொது–I) துறை, நாள் 29.3.2013.

———

ஆணை:–

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2013 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட ஆணைவெளியிடப்பட்டது. மேலும் 2016–ஆம் ஆண்டு முடிய ஆண்டு வாரியாக இத்திட்டத்திற்கு தேவையான நூல்களில், கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் உற்பத்தி செய்து வழங்க இயலும் நூல் தவிர, எஞ்சிய நூல்களை தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ஐ பின்பற்றி அந்தந்த ஆண்டுகளில் ஒப்பந்த புள்ளிகளை கோர அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

/த.பி.பா/

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான நூல்களை கொள்முதல் செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கும் நிலைக் குழுவினை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–த்தின்படி அமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதங்களில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை குறிப்பிட்ட கால கெடுவிற்குள் உற்பத்தி செய்து வழங்க ஏதுவாகவும், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தொடர்ந்து உற்பத்தியினை மேற்கொள்ள ஏதுவாகவும் பின்வரும் இனங்களுக்கு ஆணை வழங்குமாறு அரசை கோரியுள்ளார்:–

அ) 2014–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு கிராமப்புற மற்றும் நகர்புற ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா வேட்டி, சேலைகளை வழங்கவும், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பினை வழங்கிடவும், விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட கொள்கையளவிலான ஆணை வழங்குதல்.

ஆ) விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு தேவையான வேட்டி, சேலைகளை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இத்திட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ள கைத்தறிகளின், முழு உற்பத்தி திறன் போக எஞ்சிய தேவையாவும், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்து வழங்க ஆணை வழங்குதல்.

இ) 13.6.2013–ஆம் நாளிட்ட கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசாணை (நிலை) எண்.130–இல் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான நூல்களை கொள்முதல் செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கும் குழுவினை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–த்தின்படி அரசு அமைத்துள்ளது. எனவே, இக்குழுவின் சேவையை பயன்படுத்தி விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2014–க்கான வேட்டி, சேலை உற்பத்திக்கு தேவையான நூல்களை கொள்முதல் செய்ய ஆணை வழங்குதல்.

ஈ) பொங்கல் 2013 திட்டத்திற்கு, அரசாணை (நிலை) எண்.137, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை, நாள் 28.6.2012–ன்படி அரசு நிர்ணயித்த தர அளவீடுகளின்படியே பொங்கல் 2014–ஆம் ஆண்டிற்கான விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு கைத்தறி சேலைகள், பெடல் தறி சேலைகள், கைத்தறி வேட்டிகள் மற்றும் விசைத்தறி வேட்டிகளுக்கான தர அளவீடுகள் மாற்றம்

ஏதும் செய்யாமல் மேற்படி அரசாணையிலுள்ள தர அளவீடுகளின்படி வேட்டி, சேலைகளை உற்பத்தி செய்ய ஆணை வழங்குதல். பொங்கல் 2014 விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் விசைத்தறி சேலைகளின் வடிவமைப்பு மற்றும் வண்ணங்களில் (Pattern and Colour) மாற்றம் செய்வது தொடர்பாக 26.6.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி விசைத்தறி சேலைகளுக்கான தர அளவீடுகளை பின்வருமாறு நிர்ணயித்து ஆணை வழங்குதல்.

<u>விசைத்தறி சேலைகளுக்கான தர அளவீடுகள்</u>

| வ. எண். | தர அளவீடுகள் | விசைத்தறி சேலைகள் |
|---|---|---|
| 1 | பாவு நூல் எண். | 60நெ ரகம் சாயமிட்ட பருத்தி நூல் |
| 2 | ஊடை நூல் எண். | 80/34பரு. சாயமிட்ட பாலியஸ்டர் நூல் |
| 3 | கரை நூல் எண். | 150பரு. காட்லுக் சாயமிட்ட பாலியஸ்டர் நூல் |
| 4 | ஒரு அங்குலத்திற்கு பாவு இழைகளின் எண்ணிக்கை | 68 |
| 5 | ஒரு அங்குலத்திற்கு ஊடை இழைகளின் எண்ணிக்கை | 68 |
| 6 | துணியின் அகலம் | 45 அங்குலம் (115 செ.மீ.) |
| 7 | துணியின் நீளம் | 5.50 மீட்டர் |

உ) விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த வருவாய் நிர்வாக ஆணையர் வழங்கும் தேவைப்பட்டியலின்படி கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து வேட்டி, சேலைகளை கொள்முதல் செய்து மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தை முகமை நிறுவனமாக கடந்த ஆண்டுகளில் நியமிக்கப்பட்டுள்ளது போல் விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2014–ன் கீழ் முகமை நிறுவனமாக செயல்பட தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தை நியமித்து ஆணை வழங்குதல்.

ஊ) 26.6.2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின்படி 60நெ. பருத்தி சாயமிட்ட நூலினை பாவாகவும், 80/34பரு. சாயமிட்ட பாலியஸ்டர் நூலினை ஊடையாகவும், 150 பரு. காட்லுக் சாயமிட்ட பாலியஸ்டர் நூலினை கரையாகவும் கொண்டு 68 பாவிழைகள் மற்றும் 68 ஊடையிழைகளுடன் உற்பத்தி செய்யப்படவுள்ள விசைத்தறி பாலிகாட் சேலைகளுக்கு சேலை ஒன்றுக்கு உத்தேச கூடுதல் செலவினம் ரூ.10.75 அடிப்படையில் திட்ட மொத்த கூடுதல் செலவினம் உத்தேசமாக ரூ.18.00 கோடி ஆகுமென கணக்கிடப்பட்டது. எனவே, விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2014–ஆம் ஆண்டிற்கு செயல்படுத்திட உத்தேச கூடுதல் செலவினத்தை கணக்கில் கொண்டு ரூ.368.00 கோடியினை ஒப்பளிப்பு செய்து வழங்க அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

/த.பி.பா./

4. 26.6.2013 அன்று 2014–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம் குறித்த ஆய்வு கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நடத்தப்பட்டது. மேற்கண்ட கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி சேலைகள், கைத்தறி வேட்டிகள், பெடல் தறி சேலைகள், பெடல் தறி வேட்டிகள், மற்றும் விசைத்தறி வேட்டிகளின் தர அளவீட்டினையே தொடர்ந்து செயல்படுத்த ஆணையிட்டார்கள். விசைத்தறி சேலைகளை பொறுத்த மட்டில் பொங்கல் 2014–ஆம் ஆண்டு முதல் 60நெ ரக சாயமிட்ட பருத்திநூலினை பாவுக்கும், 80/34பரு. சாயமிட்ட பாலியஸ்டர் நூல் ஊடைக்கும், 150பரு. சாயமிட்ட காட்லூக் பாலியஸ்டர் நூல் கரை நூலாகவும் பயன்படுத்தவும் ஆணையிட்டார்கள். விசைத்தறி சேலைகளின் தர அளவீடு மாறுதலால் ஏற்படவுள்ள கூடுதல் செலவினம் ரூ.18 கோடிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

5. 2014–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்குத் தேவைப்படும் வேட்டி சேலைகளின் உற்பத்தியை குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்தி செய்து மாவட்ட ஆட்சியருக்கு வழங்குவதற்கேதுவாக கீழ்க்கண்ட இனங்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது:–

(i) விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை 2014–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு தொடர்ந்து செயல்படுத்துதல்;

ii) விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு தேவையான வேட்டி, சேலைகளை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இத்திட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ள கைத்தறிகளின், முழு உற்பத்தி திறன் போக எஞ்சிய தேவையாவும், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்திட வேண்டும்;

iii) பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் நூல் கொள்முதல் தொடர்பாக அமைக்கப்பட்ட நிலைக்குழுவே 2014–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான நூல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது;

iv) கைத்தறி, பெடல்தறி மற்றும் விசைத்தறி வேட்டி, சேலை உற்பத்தி செய்ய கீழ்க்காணும் தர அளவீடுகள் (Specification) நிர்ணயம் செய்யப்படுகிறது:-

**கைத்தறி:-**

| வ. எண். | தர அளவீடுகள் | கைத்தறி சேலைகள் | பெடல் தறி சேலைகள் | கைத்தறி/பெடல்தறி வேட்டிகள் |
|---|---|---|---|---|
| 1. | பாவுநூல் எண். | 40நெ பருத்தி கலர் சிட்டா நூல் | 40நெ பருத்தி கலர் சிட்டா நூல் | 60நெ பருத்தி கிரே கோன் நூல் |
| 2. | ஊடை நூல் எண். | 80/34பரு. கலர் பாலியஸ்டர் நூல் | 80/34பரு. கலர் பாலியஸ்டர் நூல் | 80/34பரு. கிரே பாலியஸ்டர் நூல் |
| 3. | கரை நூல் எண். | -- | -- | 2/80நெ பருத்தி கலர் சிட்டா நூல் |
| 4. | அச்சு எண். | 56 | 56 | 72 |
| 5. | ஒரு அங்குலத்திற்கு ஊடை இழைகளின் எண்ணிக்கை | 56 | 56 | 70 |
| 6. | துணியின் அகலம் | 45 அங்குலம் (115 செ.மீ) | 45 அங்குலம் (115 செ.மீ) | 50 அங்குலம் (127 செ.மீ) |
| 7. | துணியின் நீளம் | 5.50 மீட்டர் | 5.50 மீட்டர் | 3.65 மீட்டர் |

**விசைத்தறி :-**

| வ. எண். | தர அளவீடுகள் | விசைத்தறி சேலைகள் | விசைத்தறி வேட்டிகள் |
|---|---|---|---|
| 1. | பாவு நூல் எண். | 60நெ ரகம் சாயமிட்ட பருத்தி நூல் | 40 நெ ரகம் பருத்தி நூல் |
| 2. | ஊடை நூல் எண். | 80/34பரு. சாயமிட்ட பாலியஸ்டர் நூல் | 80/34பரு. கிரே பாலியஸ்டர் நூல் |
| 3. | கரை நூல் எண். | 150பரு. காட்லூக் சாயமிட்ட பாலியஸ்டர் நூல் | 155பரு. 250 TPM/ சாயமிட்ட பாலியஸ்டர் நூல் |
| 4. | ஒரு அங்குலத்திற்கு பாவு இழைகளின் எண்ணிக்கை | 68 | 64 |

| வ. எண். | தர அளவீடுகள் | விசைத்தறி சேலைகள் | விசைத்தறி வேட்டிகள் |
|---|---|---|---|
| 5. | ஒரு அங்குலத்திற்கு ஊடை இழைகளின் எண்ணிக்கை | 68 | 64 |
| 6. | துணியின் அகலம் | 45 அங்குலம் (115 செ.மீ) | 50 அங்குலம் (127 செ.மீ) |
| 7. | துணியின் நீளம் | 5.50 மீ | 3.75 மீ |

கைத்தறி, பெடல் தறி வேட்டி சேலைகள் மேற்குறிப்பிட்ட அளவீடுகளுக்கு குறைவில்லாமல் இருக்க வேண்டும் மற்றும் விசைத்தறி வேட்டி சேலைகள் மேற்குறிப்பிட்ட அகலம் மற்றும் நீளம் ஆகிய தர அளவீடுகளுக்கு ± 2%க்கு குறைவில்லாமல் இருக்க வேண்டும். ஒரு சேலையின் எடை மாதிரி சேலையின் எடையான 372 கிராமிற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

v) 2014–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கு வருவாய் துறையின் மூலம் வேட்டி சேலை பெற தகுதியுடைய நபர்களின் பட்டியலை சென்ற ஆண்டு பயன்பெற்றோர் பட்டியல் அடிப்படையில் தயாரித்து அதனை முறைபடுத்தும் மென்பொருள் பதிவுறுக்களை ஏற்படுத்திடவும் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

vi) கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் வழங்கும் தேவைப்பட்டியலின் அடிப்படையில், வேட்டி சேலைகளை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து, மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கும் முகமை நிறுவனமாக (Nodal Agency) கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தொடர்ந்து செயல்பட அனுமதி வழங்கப்படுகிறது;

vii) 2014–ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கான இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கு தேவைப்படும் வேட்டி சேலைகளின் எண்ணிக்கை குறித்த விவரத்தினை கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து பெற்று உரிய கருத்துருவினை அரசுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரால் பெறப்பட்ட பின்னர் தேவைப்படும் வேட்டி சேலைகளின் எண்ணிக்கையினை நிர்ணயித்து உரிய ஆணைகள் வழங்கப்படும்;

viii) ஏற்கனவே இத்திட்டத்திற்காக 2013–2014ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்த தொகையான ரூ.350 கோடியுடன் விசைத்தறி சேலைகளின் தர அளவீடு மாறுதலால் உத்தேசமாக ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.18 கோடியை திருத்திய மதிப்பீட்டில் வழங்க உரிய கருத்துருக்கள் நிதி(தொழில்கள்) துறைக்கு அனுப்ப அறிவுறுத்தப்படுகிறது;

ix) 2013–2014ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்த தொகையான ரூ.350 கோடியில் பொங்கல் 2014–ஆம் ஆண்டு விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம் செயல்படுத்த ரூ.344.75 கோடியினை கீழ்க்கண்ட காலமுறைப்படி கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு முன்பணம் வழங்க அனுமதிக்கப்படுகிறது.

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| ஜூலை 2013 | – | 100 |
| ஆகஸ்டு 2013 | – | 100 |
| செப்டம்பர் 2013 | – | 100 |
| அக்டோபர் 2013 | – | 44.75 |
| மொத்தம் | | 344.75 |

மீதமுள்ள தொகையை கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் இத்திட்டம் குறித்த முன்னேற்ற அறிக்கை மற்றும் தேவை குறித்த கருத்துரு பெறப்பட்டபின் ஒப்பளிப்பு செய்யப்படும்.

6) மேலே பத்தி 5 (ix)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பின்வரும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்க வேண்டும்:-

| கணக்குத் தலைப்பு | தொகை (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் –200 ஏனைய திட்டப்பணிகள் – **பன்னிரெண்டாம்** ஐந்தாண்டு திட்டப்பணிகள் –II மாநிலத் திட்டம் – JK வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு இலவசமாக கைத்தறித் துணி வழங்குதல் – 11 மானியங்கள் – 02 பொதுவான மானியம் (தகவல் தொகுப்பு குறியீடு 2235 60 200 JK 1123) | 256,75,00 |
| 2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 789 ஆதி திராவிடருக்கான சிறப்புக்கூறுகள் திட்டம் – **பன்னிரெண்டாம்** ஐந்தாண்டு திட்டப்பணிகள்–II மாநிலத் திட்டம் – JS சிறப்புக்கூறுகள் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு இலவசமாக கைத்தறித் துணி வழங்குதல்–11 மானியங்கள்–02 பொதுவான மானியம் (தகவல் தொகுப்பு குறியீடு 2235 60 789 JS 1121) | 88,00,00 |
| மொத்தம் | 344,75,00 |

7) மேலே பத்தி 5 (ix)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை கீழ்க்கண்ட கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் தன் வைப்புக் கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்:

"K. வைப்புத் தொகைகளும் முன்பணங்களும் –(b) **வட்டி பெறாத வைப்புத் தொகைகள் 8443 00 பொது வைப்புத் தொகைகள் 800 மற்ற வைப்புகள்** - BN தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் வைப்புத் தொகைகள் (கோ–ஆப்டெக்ஸ்) "

(தகவல் தொகுப்பு குறியீடு 8443 00 800 BN 000E (வரவுகள் )

8) மேலே பத்தி 5 (ix)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான செலவினத்தை மேற்கொள்வதற்கு ஏதுவாக, அரசாணை (நிலை) எண்.102, நிதி (வ.செ.பொது–1) துறை, நாள் 29.03.2013யில் வெளியிடப்பட்டுள்ள காலாண்டு நிதியொதுக்கக் கட்டுப்பாட்டினை தளர்வு செய்து கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

9) மேலே பத்தி 5 (ix)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்கான செலவினத்தை மேற்கொள்ள, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மற்றும் தனி அலுவலர்/மேலாண்மை இயக்குநர், கோ–ஆப்டெக்ஸ் ஆகியோர் இத்திட்டம் தொடர்பாக, உரிய நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10) பொங்கல் 2014, விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கான வேட்டி சேலை தேவை எண்ணிக்கையினை குறிப்பிடும்படி கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரை கேட்டுக்கொள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

11) இவ்வாணை, நிதித் (தொழில்கள்) துறையின் அலுவல் சார்பற்ற எண்.116/JS(per)/BGI/2013, நாள் 28.6.2013–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு. பஷீர் அஹமது
அரசு செயலாளர்(மு.கூ.பொ.)

பெறுநர்

கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர், சென்னை–108.
தனி அலுவலர்/மேலாண்மை இயக்குநர், கோஆப்டெக்ஸ், சென்னை–8.
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5
மாநில தலைமைக் கணக்காயர் (A&E),சென்னை–18/(பெயரில்)
மாநில தலைமைக் கணக்காயர் (CA), சென்னை–18 /(பெயரில்)
மாநில கணக்காயர் (CAS), சென்னை–9.

சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1 .

<u>நகல் :–</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9.
வருவாய்த் துறை / நிதித் (தொழில்கள் / வ.செ.பொது–1) துறை, சென்னை–9.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(ஏ1/பி1) துறை, சென்னை–9.
அரசு செயலாளர் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்
துறையின் தனிச் செயலாளர், சென்னை–9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

அரசு சார்புச் செயலாளர்